தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் ௪௮	திருவள்ளுவர் யாண்டு உ௰௫ ஆனந்த, ஐப்பசி (1974 — அக்டோபர் — நவம்பர்)	மலர் எ

புரட்சிக் கவிஞரின் கற்பனை வளம்

இராம. சுப்பிரமணியன், எம். ஏ. பி. லிப். எஸ்ஸி., பி. ஜி. எல்.
4-B, தீத்தாரப்பமுதலி தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை — 5.

கற்பனையின் தோற்றம்.

உணர்ச்சியின் பிழம்பாக உள்ள கவிஞன், தான் உணர்த்த விரும்பும் உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதற்கு, வாயிலாக உள்ள பொருள்களைத் தன்னுடைய மனக்கண்களால் காணுகின்றான். அவற்றை உவமை உருவகம் முதலிய கற்பனை மலர்களால் பிணைத்துக் கூற முயலுகிறான் வெவ்வேறாக உள்ள பொருள்களைத் தன் வாழ்க்கை அனுபவம் என்னும் கயிற்றால் பிணைத்து, அவற்றிடையே புதியதோர் பொலிவை அவன் ஊட்டுகிறான். அதற்காக, அவன் பயன்படுத்தும் சொற்களில் இருவகைச் செயல் முறைகளை மேற் கொள்ளுகின்றான். படிப்போருடைய உள்ளத்தில் கருத்தில் வடிவங்களைத் தோற்றுவிப்பதோடு, உணர்ச்சி அனுபவத்தையும் அவை ஊட்டுகின்றன. இவ்வகையில் அமைவதே கற்பனை. [1]

கவிதையும் கற்பனையும்

கலைகளுள் சிறந்தது இலக்கியக் கலை. அதன் சிறப்புமிக்க பண்புகள் நான்கு. அவை உணர்ச்சி கற்பனை, கருத்து, வடிவம் என்பன. இலக்கியத்தின் முதல் குழந்தையாகிய கவி

1 க. த. திருநாவுக்கரசு: திருக்குறளில் கற்பனைத் திறனும் நாடக நலனும். பக். 30 — 31

தைக்கே அவை சிறப்பாக அமைந்த பண்புகளாகும். ஒரு கவிஞனுடைய உள்ளத்தில் உணர்ச்சிப் பெருக்கும். கற்பனைத் திறனும். ஆற்றல் மிக்க கருத்தும் முட்டி மோதுகின்றபொழுது கவிதை மலர்கிறது. [2]

கற்பனை வகை

'கற்பனையின் பொங்கலே கவிதை' என்று ஷெல்லியும்; [3] கவிதைக்கு உயிர், உணர்ச்சி. உடல் கற்பனை; உடை ஒலிநயம் என்று டாக்டர் மு வ-வும் கூறுகின்றனர் [4]

கற்பனை இருவகைப்படும்; அவை உண்மைக் கற்பனை, வெறுங் கற்பனை என்பன. உள்ளதையே சிறப்பித்து உயர்வு நவிற்சியும் அளவாகக் கூட்டிக் கூறுவது உண்மைக் கற்பனை. இல்லதைப் புனைந்து உயர்வு நவிற்சி வரம்பு கடந்து சேர்த்துக் கூறுவது வெறுங் கற்பனை. [5]

அறுவகைப் பொருள்

இந் நூற்றுண்டின் சிறப்புமிக்க இலக்கியத் திறனய்வாளர்களுள் ஐ ஏ. ரிச்சர்ட்ஸ் ஒருவர். அவர் 'இலக்கியத் திறனய்வுக் கொள்கைகள்' என்னும் நூலில், பல்வேறு பொருள்களில் 'கற்பனை' எனும் சொல் வழங்கப்பட்டு வருவதைச் சுட்டி அவற்றை ஆறு வகையாக வகைப்படுத்திக் காட்டுகிருர் அவை வருமாறு:

(1) உள்ளத்தைக் கவரக்கூடிய வடிவங்களைப் படைக்கும் ஆற்றல்.

(2) உவமைகளையும் உருவகங்களையும்கொண்டு பொருள்களை உறவு படுத்திக் காணும் ஆற்றல்.

(3) பிறருடைய உள்ளங்களில் புகுந்து அவருடைய மனநிலையைச் சித்திரிக்கும் தன்மை.

---

2 க. த. திருநாவுக்கரசு: திருக்குறளில் கற்பனைத் திறனும் நாடக நலனும். பக். 26

3 Baker, Carlos, (Ed.) The Selected poetry and prose of P. B. Shelley, P. 494.

4 மு. வரதராசன்: குறுந்தொகைச் செல்வம், பக். 4.

5 மு வரதராசன்; ஓவச் செய்தி, பக். 106.

(4) வெவ்வேறாக உள்ள பொருள்களை இயைத்துக் காணுந்திறன்.

(5) வாழ்க்கையின் அனுபவத்தை வெவ்வேறு வகையாக முறைப்படுத்துகின்ற இயல்பு.

(6) பொருள்களை உள்ளவாறே உணரும்போது, ஒன்றோடொன்று மோதுகின்ற பல உணர்ச்சிகளை, முரண்படும் பல கருத்துக்களை, ஒரு பெரும் கருத்து அல்லது பேருணர்ச்சியின் ஆட்சிக்குட் படுத்துந் திறன்

என்னும் ஆறுவகைப் பொருள்களைக் 'கற்பனை' எனும் சொல் உணர்த்துகிறது என்பர்.[6]

இந் நூற்றாண்டில் தோன்றிய கவிஞர்கள் 'கற்பனை' என்னும் சொல்லைக் கவிதைக் கலையின் சிறப்புமிக்க பண்பாகிய, 'இல்லாததைப் படைத்து மொழியும் அறிவுத்திறன்' என்னும் பொருளில் பெரிதும் வழங்கியுள்ளார்கள். குயிற்பாட்டின் முடிவில், 'தம் கற்பனையில் தோன்றியதே குயிற்பாட்டு' என்பதைப் புதுமைக் கவிஞர் பாரதியார் குறிப்பிட்டுள்ளார் :

மாலை யழகின் மயக்கத்தால் உள்ளத்தே
தோன்றியதோர் கற்பனையின் சூழ்ச்சியென்றே
கண்டுகொண்டேன்
ஆன்ற தமிழ்ப்புலவீர்! கற்பனையே யானாலும்
வேதாந்த மாக விரித்துப் பொருளுரைக்க
யாதானும் சற்றே இடமிருந்தாற் கூறீரோ![7]

பாவேந்தர் பாரதிதாசன் 'புனைந்துரைத்தல்' என்னும் பொருளிலேயே, 'கற்பனை' என்னும் சொல்லை அமைத்துள்ளார்.

கற்பனை ஊற்றாம் கதையின் புதையல்
திறம்பாட வந்த மறவன்.[8]

இந்தக் 'கற்பனை வளம்' புரட்சிக் கவிஞர் கவிதைகளில் எவ்வாறு காணக்கிடக்கிறது என்பதை சுருங்கக் கூறுவதே இக்கட்டுரை.

---

6 Richards, I, 4: Principles of Literary Criticism. PP. 239 — 243.
7 குயில் பாட்டு 9 ; 258 — 62.
8 பாரதிதாசன் கவிதைகள் 2. 23 : 58 — 59

பிறைத் திங்கள்

மகளிர் கண் முதலியவற்றின் அழகை எடுத்துரைக்கும் புலவர்கள் அவற்றிற்கு அமைத்துள்ள ஒப்புமைகள் மிகப் பொருத்தமாக அமைந்துள்ளன. இந்த உவமைகள் வழி வழியாக இலக்கியத்தில் நின்று வழங்கி வருவன எனினும். தொடக்கத்தில் உவமைப் படுத்திய பழங்காலப் புலவர்களின் கற்பனையில் நயம் மிக்கு விளங்குதல் காணலாம்.

'கலைமானின் மார்பிலே தைக்குமாறு எய்து இரத்தத்தோடு பறித்த திரட்சியுள்ள செந்நிறமான அம்புகள் இரண்டு மாறுபட வைக்கப்பட்டாற் போன்றவை மகளிரின் மையுண்ட கண்கள்.[9] என்றும், கருநிறக் கூந்தலை அடுத்து விளங்கும் சிறு நெற்றி, கரிய கடலில் தோன்றும் எட்டாம் பிறைத் திங்களைப்போல் உள்ளது என்றும்[10] நாம் குறுந்தொகைப் பாடல்களில் காணமுடிகிறது

மாவடு.

கண்ணை மாவடு (மாம்பிஞ்சு) போன்றது என்று கூறும் உவமை பிற்காலப் புலவர்களின் பாட்டுக்களில் உயிரற்றவாய் பாடுபோல் வழங்குகிறது சங்கப் புலவர் ஒருவர் மாவின்வடு எந்த நிலையில் கண்ணுக்கு உவமையாகத் தக்கது என்பதை விளக்கியுள்ளார். மாவடுவைக் கத்தி கொண்டு இரு துண்டாக அறுத்தால், வெண்ணிறக் கொட்டை பாதியாய்த் தோன்றும் பகுதி, கண்ணின் வடிவத்திற்கு உரிய உவமையாகும். இரும்புக் கத்திபட்ட காரணத்தால், அறுபட்ட இளங்கொட்டையின் வெண்ணிறம் மெல்ல மெல்ல மாறி நீலநிறமாக அமையும் பாதி வடுவின் இடையே தோன்றும் இந்த நீலநிறப் பகுதி. கண்ணின் இடையே உள்ள கருவிழி போன்றதாகும். இதனையே புலவர் கண்ணுக்கு உவமையாக்கியுள்ளார்.

எஃகுற்று
இருவேறு ஆகிய தெரிதகு வனப்பின்
மாவின் நறுவடி போல உண்கண்[11]
இக் கருத்தினையே புரட்சிக் கவிஞர் அவர்கள்,

---

9 குறுந் 272. ஒருசிறைப் பெரியனார்
10 குறுந். 129. கோப்பெருஞ் சோழன்
11 அகம். 29. வெள்ளாடியனார்

மாவடு வொத்த கண்ணுளை — இள
வஞ்சிக் கொடிக்கிணை யாளை [12]

என்று கடல்மேற் குமிழிகளில் கூறும் நயம் எண்ணிப்பார்க்கத் தக்கது ஆகும்.

உயிர் மிகச் சிறியது

தலைவன் வந்து வந்து தலைவியைக் கண்டு மகிழ்ந்து திரும்பினுன். திருமணம் செய்து கொண்டு அமைதியாக வாழுமாறு தோழி அறிவுரை கூறத் துணிந்தாள். தலைவனும் தலைவியும் ஒன்றுபட்டு மகிழும் நேரத்தைவிடப் பிரிந்து வருந்தும் நேரமே

மிகுதி ஆகையால், இது வாழ்வுக்கே தீங்கு என்பதை அறிவுறுத்த முனைந்தாள் மலைநாட்டில் வாழ்ந்து பழகிய அவளுக்குப் பலா மரங்களில் இருவகை நினைவுக்கு வந்தன. திருமணம் செய்து கொள்ளாமல் அஞ்சி அஞ்சி வாழும் காதல் வாழ்க்கை, கிளைகளில் பலாப்பழங்கள் தொங்கும் மரம்போல் இடையூறு மிக்கது ; திருமணம் செய்து கொண்டு அமைதியாக வாழும் இல்வாழ்க்கை, வேர்களில் பல பழங்கள் பழுத்துள்ள வேர்ப்பலாப்போல் இடையூறு இல்லாதது என்று தெரிவித்தாள்

'நின் சாரற் கண்ணே பலாவின் சிறு கொம்பிற் பெருங்கனி ஏந்தும் பற்றுக்கோடின்றித் தானே நன்கு பருப்பது போல. இவள் உயிராகிய கொம்பு மிகவும் மெல்லியதாக இவள்கட் பழுத்த காமக்கனியோ நாளும் தவப் பெரிதாவது. இன்னும் முதிரவிட்டாற் பழம் அச்சிறு கொம்பை ஒடித்துக் கீழே பயன்படாது வீழ்ந்தொழிவது போல் இவள் காமம் இவளுயிரைக் கெடுத்தொழியும் என்று தோழி கூற்றுகக் கபிலர் பாடுகின்ருர்.

வேரல் வேலி வேர்க்கொள் பலவின்
சாரல் நாட! செவ்வியை ஆகுமதி;
யார்அஃது அறிந்திசி னோரே; சாரல்
சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கி யாங்குஇவள்
உயிர்தவச் சிறிது; காமமோ பெரிதே. [13]

---

12 பாரதிதாசன் கவிதைகள். 3. பக். 8
13 குறுந் 18 கபிலர்

மக்களைத் துயரத்தில் ஆழ்த்தினன் மாழை மன்னன். கொன்றை நாட்டின் தலைவருள் சிலரை, மகிணனுடன் சிறையில் தள்ளி அடைத்தான். மக்கள் துயர்கண்டும், மனங்கவர்ந்தோன் இன்னல் கேட்டும் ‘கிள்ளை துன்பவெள்ளத்தில் வீழ்த்தாள்? அவளின் புலம்புறு நிலையை மாழை மன்னனிடம் அறிவிக்கின்ருன் ஒள்ளியோன் என்னும் ஊராள் தலைவன்.

"பிழிதேன் மொழியாள் பெருங்குரல் பாய்ச்சி
ஐயகோ என்ன அழுதிருக்கின்ருள்
ஐயுறு கின்றேன் அவ்உயிர் வாழ்வதில்
(இவ்வாறு நான் பயப்படக் காரணம் உண்டு)
பின்னிய சிலந்திநூல் பெருங்காற்றைத் தாங்குமோ?
துன்பம் நனிபெரிது; தூய்உடல் நனிமெலிது. [14]

சிலந்திநூல் உவமை மிக இனிது. பின்னடியில் வரும் ‘பெரிது’ ‘மெலிது’ மேலேகண்ட குறுந்தொகை ‘வேரல் வேலி’ப் பாட்டில் முகிழ்த்தது போலும்

‘காமமோ பெரிது, களைஞரோ இலரே’ [15] என்ருள் சங்க இலக்கியத் தலைவி, இங்கு தலைவனின் வருகைக்காகக் காத்து நின்ற அரசி. அப்பிரிவுத்துயரில்,

"நெஞ்சுக்கு நெருப்பாக வந்த வட்ட
நிலவுக்குத் தப்புவதும் எளிதோ தோழி" [16]

என்று தன் ஆற்ருமையை வெளிப்படுத்துகின்ருள். தண்மை ஒளிதரும் நிலவும் நெருப்பாய்க் காயும் அவள் துயரம் பெருகியிருக்கிறதாம்.

கதிரவனைப் போற்றுதல் சங்க இலக்கியத்திலேயே காணலாம்.

ஞாயிறு போற்றுதும்! ஞாயிறு போற்றுதும்!
காவிரி நாடன் திகிரிபோல் பொன் கோட்டு
மேரு வலம் திரிதலான். [17]

என்றும்,

---

14 காதலா? கடமையா?
15 நற்றிணை. 335
16 கண்ணகி புரட்சிக் காப்பியம் பக். 212
17 சிலப்பதிகாரம் பதிகம்.

முந்நீர் மீமிசைப் பலர்தொழத் தோன்றி
ஏமுற விளங்கிய சுடர் [18]

என்றும்,

உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாங்கு

என்றும் போற்றப் படுதலைக் காணலாம். [19]

பாவேந்தரும் இளங்கோவடிகள், மருதனிள நாகனார், நக்கீரர் ஆகியோரின் அடிகளைப் பின்பற்றுகின்றார். கவிஞர் கீழைக் கடல்மேல் தோன்றிவிட்ட பரிதியை வாழ்த்துகின்றார்.

எழுந்தது கீழ்க்க டல்மேல்
இளங்கதிர், மூசைத் தங்கம்
பொழிந்தது விண்ணும் மண்ணும்
பொழிந்தது தமிழர் நாடு!
சூழிய மணமு கில்கள்
துலங்குக நன்செய் யாண்டும்!
ஆழ்கடல் மிசைஎ ழுந்த
அழகிய பரிதி வாழ்க [20]

என்றும்,

உலகமிசை உணர்வெழுப்பிக் கீழ்த்திசையின் மீதில்
உதித்துவிட்டான் செங்கதிரோன்; தகத்தகா யம்பார்;
விலகிற்று காரிருள்தான்; பறந்ததுபார் அயர்வு.
விண்ணிலெலாம் பொன்னொளியை ஏற்றுகின்றான்
அடடா. [21]

என்றும் இளம் பரிதியினைச் சிறப்பித்துக் கூறுகின்றார்.

புரட்சிக்கவி காட்டும் முழு மதியம்

நிலாக்கற்றை பரவும் நேர்த்தியை விளக்கக் கவிஞன் கூறுங் கற்பனை ஓவியம் நம் உள்ளத்தைப் பிணித்து நிற்கின்றது. அந்த இன்னமுத ஓவியம் இது :

---

18 நற்றிணை. 283
19 திருமுருகாற்றுப்படை 1—2.
20 பொங்கல் வாழ்த்துக் குவியல்—பொங்கல் வாழ்த்து பக். 2
21 பாரதிதாசன் கவிதைகள் 1. — உதயசூரியன் பக்: 56

நீத்தம் அதனில் முளைத்தெழுந்த
நெடுவெண் திங்கள் எனுந்தச்சன்
மீத்தன் கரங்கள் அவைபரப்பி
மிகுவெண் நிலவாம் வெண்சுதையால்
காத்த கண்ணன் மணியுந்திக்
கமல நாளத் திடைப்பண்டு
பூத்த அண்டம் பழையதென்று
புதுக்கு வானும் போன்றுளதால் [22]

என்றும் 'வானமங்கை தன் கையில் ஒரு விளக்கைத் தாங்கி நிற்பதுபோல் உள்ளது' என்றும் பாடினார்

மைவிளக் கியதே யன்ன
வயங்கிரு டுரக்க வானங்
கைவிளக் கெடுத்த தென்ன
வந்தது கடவுட் டிங்கள் [23]

இங்ஙனம் முழுமதியத்தின் பேரழகில் ஈடுபடுகின்றார் கம்பர். நம் புரட்சிக் கவிஞர் அந்த அழகில் ஈடுபடுவதைக் காண்போம். காதல் மயக்கத்தில் ஆழ்ந்து கிடக்கும் கவிஞர் பேசுகின்றார்.

நீலவான் ஆடைக்குள் உடல் மறைத்து
நிலாஎன்று காட்டுகின்றாய் ஒளிமு கத்தைக்
கோல்முழு துங்காட்டி விட்டால் காதல்
கொள்ளையிலே இவ்வுலகம் சாமோ? வானச்
சோலையிலே பூத்ததனிப் பூவோ நீதான்
சொக்கவெள்ளிப் பாற்குடமோ? அமுத ஊற்றோ
காலைவந்த செம்பரிதி கடலில் மூழ்கிக்
கனல்மாறிக் குளிரடைந்த ஒளிப்பி ழம்போ! [24]

இங்குக் கவிஞர் சந்திரனை ஒரு பெண்ணாக உருவகிக்கின்றார். அந்தப் பெண் நீல ஆடை புனைந்து உடலையெல்லாம் மறைத்துக்கொண்டு முகத்தை மட்டும் வெளிக் காட்டுகின்றாள். அவளுடைய முழு அழகையும் காட்டிவிட்டால் அவள் காதல் வெள்ளத்தில் உலகம் இறந்துபடுமோ என்று வினவுகின்றார். 'சந்திரனே, நீ வானச் சோலையில் பூத்த ஒரு தனிப்பூவோ?

---

22 கம்பரா. பாலகா. மிதிலைக்காட்சி — 74.
23 கம்பரா. 2 : 5 : பாடல் 19
24 பாரதிதாசன் கவிதைகள் 1: பக். 20

பாலமுதம் நிறைந்த சொக்க வெள்ளிக் குடமோ? அமுத ஊற்ருே? காலையில் கனன்று எழுந்த செவ்விய சூரியன் கடலில் மூழ்கி வெப்பத்தை இழந்து தண்ணொளி வீசும் ஒளிப்பிழம்பாக வடிவெடுத்ததோ?' என்று நேருக்கு நேர் பேசுவது நம்மைக் கிளர்ந்தெழச் செய்கின்றது. 'பிள்ளைத் தமிழ்க்' கவிஞர்கள் 'அம்புலிப் பருவத்தில்' அமைத்துக் காட்டுங் கற்பனையெல்லாம் ஆழ்ந்திருக்கும் கவியுள்ளத்தைக் காட்டி நிற்பதாகும்.[25]

ஒக்கவே வாழ்க!

கவிஞன் தன் உணர்ச்சிகளைத் தான் படைக்கும் பாத்தி ரங்களின் வாயிலாகவோ அல்லது இயற்கையின் வாயிலாகவோ வெளியிடுகின்ருன். கோவலனை மதுரை மாநகருக்குள் வர வேண்டாம் என்று பாண்டியன் கோட்டைச் சுவர்மீது பறந்த கொடியின் அசைவில் இளங்கோவடிகள் தம் கருத்தினை ஏற்றிக் கூறுகிருர்.

போருழந் தெடுத்த வாரெயில் நெடுங்கொடி
வாரல்என் பனபோல் மறித்துக் கைகாட்ட [26]

இதே கருத்தினை நாம் கம்பரின் மிதிலைக் காட்சிப் படலத் திலும் காணலாம். காவலையுடைய அழகிய மிதிலை நகரம் திரு மகள் தன் குற்றமற்ற தாமரை மலரிடத்தை விட்டு நீங்கி யான் புரிந்த பெருந்தவப் பேற்ருல் என்னிடம் வந்து அவ தரித்துள்ளாள் என்று கருதி பேருறுதி வாய்ந்த துவசங்கள் என்னும் கரங்களை உயர எடுத்துச் செந்தாமரைக் கண்ண னின் அவதாரமூர்த்தி இராமபிரானுதலின் அவன் தன் தேவி யைத் தேடி எங்கும் திரிய வேண்டா; இங்கேதான் அவள் வளர்கிருள்; அதனல் 'விரைந்து வருக' என்று அழைப்பதைக் கொடிச் சீலைகளின் அசைவுகள் ஒத்திருந்தது என்று கம்பர் குறிப்பிடுகின்ருர்.

மையறு மலரி னீங்கி
யான்செய் மாதவத்தின் வந்து
செய்யவ ளிருந்தா ளென்று
செழுமணிக் கொடிக ளென்னும்

---

25 டாக்டர் ந. சுப்புரெட்டியார்: எழிலுடை இருசுடர் தோற்றம், கலைக்கதிர் வெள்ளி விழாமலர், 1974. பக். 154—155.

26 சிலப்பதிகாரம், 13: 189 — 190

கைகளை நீட்டி யந்தக்
கடிநகர் கமலச் செங்கண்
ஐயனை யொல்லை வாவென்
றழைப்பது போன்ற தம்மா! [27]

குடும்ப விளக்காக விளங்கும் பெண்ணும் அவள் குழந்தைகளும் கடற்கரையில் உலாவச் சென்ற பொழுது அவர்களை வாழ்த்த எண்ணுகின்றார் கவிஞர். கடலின் ஒலியில்,

ஒக்கவே வாழ்க மக்காள் [28]

என்ற வாழ்த்தை அவள் கேட்டாள் என்றமைத்துத் தம் குறிப்பை ஏற்றிக் காட்டுகின்றார்.

பொழிந்தது மாரி!

சுதர்சன்சிங் என்னும் கொடியவன் சுப்பம்மா என்னும் தமிழச்சியை உணவில் மருந்திட்டு மயங்கச் செய்து கற்பைச் சூறையிடுகின்றான். இதைக் கண்ட இயற்கை பொங்கி மறை முகமாக அழுததாம் என்று இயற்கையில் அவல உணர்ச்சியை ஏற்றியும் காட்டுகின்றார் கவிஞர்

பொங்கிற்று வானில் முழக்கம் — மின்னல்
பொல்லாங்கு காட்டிற்று! நல்ல
மங்கைக் கிரங்கி இருட்டும் — அழும்
வண்ணம் பொழிந்தது மாரி! [29]

கவிஞர் புதுமையான கற்பனைகளைப் பொருத்தமான இடங்களில் கையாண்டு உள்ளதைக் காணலாம். காதல் வயப்பட்ட தலைவன் காதலியால் தடுக்கப்பட்டுத் தவிக்கின்ற நிலைக்கு.

தாழச் சுடுவெய்யில் தாளாமல் நான் குளிர்ந்த
நீழலைத் தாவும்போது நில்என்று நீதடுத்தாய் [30]

என்றும்,

---

27 கம்பராமாயணம்: மிதிலைக் காட்சி
28 குடும்ப விளக்கு பக். 28
29 தமிழச்சியின் கத்தி பக். 77
30 பாரதிதாசன் கவிதைகள் 1

ஆடாமல் அசையாமல் சஞ்சீவி மலையை கீழே வைக்கின்ற நிலைக்கு.

கண்ணாடிப் பாத்திரத்தைக்
கல்தரையில் வைப்பதுபோல் [31]

என்ற கற்பனையும் 'சஞ்சீவிப் பர்வதத்தின் சாரலில்' சிறப்புற அமைத்துக் காட்டியுள்ளார்.

பாதம் தொடர்வதன்றி !

பாவேந்தர் தொட்ட இடமெல்லாம் சங்கப் பாடல்களின் கருத்துக்களையும் உவம உருவகங்களையும் கையாள்கின்றார். தன்னைவிட்டுப் பிரிந்து செல்லுகின்ற தலைவன் மழைக் காலத்தில் இருட்டில் நடந்து செல்கிறான். எனவே, அவனுடைய பாதங்கள் நோகுமே என்று வருந்துகின்ற தன் மனத்தைத் தலைவி ஒருத்தி உருவகப் படுத்தி, 'தோழி, என்னுடைய மனம் என்னிடம் இல்லை தலைவனுடைய திருவடிகளைத் தாங்கிக் கொண்டு அவனுடைய கால் செருப்புப்போல் அவன் பின்னேயே சென்றுவிட்டது என்று பேசுகிறாள்.

மின்றுபா டவிந்து மனைமடிந் தன்றே
... .
இருளிடை மிதிப்புழி நோக்கியவர்
தளரடி தாங்கிய சென்ற தின்றே [32]

என்ற உருவகம் கவிஞர் வாக்கில்,

ஆதரவு காட்டாமல் ஐயா எனைவிடுத்தால்
பாதரட்சை போலும்உன் றன் பாதம் தொடர்வதன்றி
வேறு கதி அறியேன் [33]

என்று சிறப்பிக்கப்படுவதைக் காணலாம்.

இவ்வாறு கவிஞர் தொட்ட இடமெல்லாம் கற்பனை வளம் மிகுந்து நிற்றலைக் காணலாம்.

---

31 ஷை (10)
32 அகம் 128
33 பாரதிதாசன் கவிதைகள். 1

அன்னை

பேராசிரியர். ச பாலசுந்தரம்.

1) அலகிலா உலகம் யாவும் ஆக்கியவ் வுயிர்கட் கெல்லாம்
புலனொடு போகம் யாவும் புரிந்தருள் செய்து, மாற்றி
நிலவுபே ராற்றல் யாதோ அப்பெருஞ் சத்தியேதான்
குலவுசீர் அன்னை அக்கை கொள்மனை மகள்என் றின்ன

2) வடிவினால் உலகை யீன்றும் வளர்துணை யாக வந்தும்
கடிகொளும் காதல் சேர்த்தும் களிப்புறு மழலை யீந்தும்
முடிவிலா துலகம் வாழ முகிழ்த்ததென் றுன்றோர் கூறும்
மடிவிலாத் தாயாம் சத்தி மலரடி வணங்கு கின்றேன்

3) யாவர்க்கும் பொதுவாய் இந்த ஞாலத்திற் காதி யாகித்
தேவர்க்கும் மேலாய் ஓங்கும் செவ்வியால் அன்னை என்று
நாவிற்கு நயந்துகூறும் நல்லுற விதனின் வேறு
பூவிற்கு வாய்த்த தில்லைப் புண்ணிய உறவே தாய்தான்

4) ஆதலால் மகவையீன்ற அத்துணைப் பேரும் யார்க்கும்
பேதிலா அன்னை யாகப் பிறங்குறும் முறையால் இந்நாள்
கோதிலா நண்பர் அன்பு கூர்தமிழ் நிலவன் தன்னை
ஈதலாற் சிறந்த தாயை இயல்பினால் வணங்கிப் போற்ற

5) உற்றவர் நண்பர் என்ற உறவின ரோடு, நாடு
மற்றவர் என்று கூறும் மரபினர் பிறரும் கூடிப்
பற்றொடு திகழ்கின் றூர்நம் பண்புசால் நகரத் தந்தை
கற்றவர் கவிஞர் சான்றோர் கதிர்ப்புறச் சூழ்ந்துள்ளார்கள்

6) இவ்வழி பாட்டுக் கூட்டம் எழில்பெறத் தலைமை தாங்கும்
செவ்வியர் நகரத் தந்தை சிறந்தஎம் தலைவருக்கும்
ஒவ்வொரு பணிக்கும் அன்பால் உடனிருந் தாக்கம்செய்யும்
பவ்விய உளஞ்சால் நண்பர் பதியவர் கட்கும், தஞ்சை

7) நயந்திடும் பேருய் வாய்த்த நவையிலா நடராசற்கும்
பயந்தவள் படந்திறந்த பைந்தமிழ் அம்மையார்க்கும்
வியந்தொழிற் கவிதைகூற வீற்றுள புலவர்கட்கும்
வயந்திகழ் அறிஞர் சேஷா சலமவர் தமக்கும் மாண்பார்

8) ஆய்வரங் கமர்ந்து சீர்த்த அன்னையின் புகழைப் பேசத்
தோய்ந்தமர்ந் திருக்கும் நண்பர், சுற்றமற்
றெல்லோருக்கும்
தாய்தமி ழாலே போற்றித் தகவொடு வணக்கஞ் செய்து
சேய்புரை நிலையில் அன்னைச் சிறப்பினைச் செப்பும்இந்த

9) பாட்டரங்கைப் பணிவோடு நிகழ்த்துகின்றேன்
பாலன்யான் ஆதலினால் அன்னை அன்பு
வேட்டபொழு தெல்லையின்றி விரைந்து சேரும்
வித்தகஞ்சேர் பெரியீர்! முன் னுரையாச் சில்சொல்
ஈட்டமுறு கவிதையினால் இயம்பு கின்றேன்
ஈன்றாளின் தயவுடையார் உலகில் உண்டோ?
ஏட்டிலிங்குத் தாய்மாண்பை முழுதும் யாரே
எழுதினவர்? எழுதவொண்ணா இயற்கை அன்னை

10) அறிவுக்கு மூலம் கல்வி ஆண்மைக்கு மூலம் திண்மை
செறிவுக்கு மூலம் கற்பு செம்மைக்கு மூலம் நோன்பு
நிறைவுக்கு மூலம் சால்பு நினையுங்கால் அருள் அன்பிற்குக்
குறையிலா மூலம் அன்னை; கும்பிடத் தகுந்த தெய்வம்

11) தாயலால் புவிமேல்இல்லை தயாவெனக் கூறும்பண்பு
தாயினாற் பிறப்ப தேயாம் தன்னையே வருத்திக்கொண்டு
வாயுண வொதுக்கிக் கொண்டாள் வறுமையைப்
பொறையால்மாற்றி
நோயொடு துன்புற் றாலும் நோக்கங்கள் முழுதும் அன்பால்

12) ஆக்கிய குழந்தை கட்கே ஆக்கிதிதம் மக்கள் வாழத்
தீக்குளும் புகுந்துநிற்கும் தெய்வமாய் மிளிர்ந்து பேசும்
வாக்கெலாம் அவர்தம் வாழ்வின் வளத்திற்கே
வழங்கி மக்கள்
மீக்கொளத் தவமே பூண்டு விளங்கிடும் தெய்வம் நற்றாய்

13) தாமரை வயிற்றில் ஏந்திச் சாற்றொணாத் துயரைத் தாங்கிச்
சாமமும் பகலும் கண்கள் சாம்பிடா திருந்து நோற்று
நேமமும் நோன்பும் பூண்டு நிறைவுறப் பெற்றுப் பின்னர்
ஆமுறை யமிழ்தம் ஊட்டி அறிவுதந் தளிப்பாள் அன்னை

14) ஆர்வத்தால் மடியேந்தி வளர்த்துச் சான்றோர்
அறிவுடையோன் எனக்கூறக் கேட்டு நெஞ்சம்
சீர்பெற்று மகிழ்பூக்கும் தாயை ஒப்பச்
சிறந்ததொரு தெய்வமிந்த உலகில்இல்லை
பேர்வைத்துச் சீராட்டிப் பேணிக் காத்துப்
பீடுபெற உலகத்திற் களிக்கும் வள்ளல்

கார்வித்தும் மழையைப் போல் கைம்மா றுன்னுக்
கடப்பாட்டைக் கனிவோடு புரிகுவாள் தாய்

15) குலந்தழைக்கக் குழவியரை ஈன்றெடுத்துக்
குடிப்பெருமைக் கேற்பவளர்த் துலகக்கீயும்
நலங்கமழும் அன்னைகுலத் தொளி விளக்காய்
நாலிருபத் திரண்டாண்டு வாழ்ந்திப் போது
வலந்தருநல் லிறையுருவில் வாழ்கின்றார்
மாண்புறநம் தமிழ்நிலவன் தன்னையீன்று
துலங்கவைத்த அன்னை பக்கிரியம்மாளின்
தூயநினை வேந்தியுளம் வணங்குகின்றோம்

16) நமைவளர்த்து வாழ்விக்கும் பொருளை எல்லாம்
நம்முன்னோர் தாயெனவே நவின்றார் தெய்வ
உமையவளும் கலைமகளும் தாம ரைமேல்
ஒளிர்பவளும் புவிமகளும் நீரும் விண்ணும்
அமையவெலாம் தாயெனவே அழைப்பர் சான்றோர்
அன்போடு தமிழ்மொழியைத் தாயென்கின்றோம்
நமைவளர்க்கும் நாட்டினைத்தாய் நாடென்கின்றோம்
நவிலுங்கால் தாயல்லால் விளைவேயில்லை

17) கையேந்தி நீராட்டிக் களிப்பை யூட்டிக்
கலைநிலவை எதிர்காட்டி அமிழ்தம் ஊட்டி
நெய்தோய்ந்த சோறூட்டி நித்தம் நித்தம்
நெஞ்சத்தால் மகிழ்ந்தறிவு நிறைய ஊட்டி
மெய்வைத்த சிந்தையினால் தந்தைக் கீந்து
விளைக்கின்ற புகழையெலாம் அவரே கொள்ள
வையத்தார் தருஞ்சிறப்பைத் தங்குடிக்கே
வழங்குபவள் தாய், இந்தத் தாயும் அன்னள்

18) அரும்புகழ் குப்புசாமி அவர்களைத் துணையாக் கொண்டு
பெரும்புகழ் தேடிநல்ல பீடுசேர் மக்கள் பெற்று
நிரம்பியசுற்றம், சூழ்ந்தார் நேயத்தோ டிணைந்துபோற்ற
அரும்பிடும் அருளால் யார்க்கும் அன்னையாய் அருளால்
வாழ்ந்த

19) அம்மையார் நினைவுநாளை அமைந்துகொண் டாடுமிக்கால்
மும்மைசேர் தமிழைக்கற்ற மொய்ம்புசால் கவிஞர் மூவர்
செம்மைசேர் கவிதைமாலை தேர்ந்தெழில் கமழச்சார்த்தி
அம்மையாம் தெய்வம்பற்றி அமிழ்தப்பா வழங்குவார்கள்

முதற்கண் :

20) தமிழேதன் உயிராக உணர்வாத் துய்க்கும்
தாரகமாக் கொண்டதற்கே தொண்டு செய்யும்
அமிழ்தான நண்பர்தமிழ் நிலவன் பெற்ற
அறிவமைந்த இளமகன்தன் அப்பத்தாயைக்
கமழன்புக்கடல் அன்னை எனத் தமிழ்ப்பா
கனிந்துரைப்பார் பேர்திருமா வளவன் துய்ப்போம்
இமிழ்தேனு ஆயாளின் சிறப்பை அன்பால்
இயம்பியநம் மிளங்கவிஞர் வாழ்க இப்பால்

21) அன்னை அறிவுக் கடலென்றே அருமைசான்ற செந்தமிழால்
கன்னற் கவிதை தருதற்குக் கனிவோ டிங்கே வருகின்றார்
துன்னும் அன்பர் என்னருமைத் தொல்காப்பியனார்
அவர்கவித்தேன்
மின்னல் மழையில் படிந்திடுவோம் ; மேலாம் அன்னை
அறிவமிழ்தை

22) தென்னைச் சாருத் தந்தனர்நம் சிறந்த கவிஞர் வாழ்க! இனி
அன்னை இயற்கையின்எல்லை ஆவாள் கைம்மாறெண்ணுமல்
பொன்னைப் பொருளைப் பிறிதொன்றைப் போற்றுதீன்ற
மகவினையே
பன்னிப் போற்றி ஆளாக்கும் பண்பால் அன்னை
இயற்கைஉரு

23) வெம்மைக் கதிராய் வெண்ணிலவாய் விளங்கி வாழ்வு
தருமன்னை
நம்மைவிளைக்கும் மண்ணுகி நறும்பாற் கடலாய்
அமிழ்தூட்டும்
செம்மை மழையாய்த் திகழ் வளியாய் செஞ்சொல்லாலே
தாலாட்டி
இம்மை மறுமை இன்பமெலாம் ஈயும் மலையாய் வானுகி

24) நிற்கின்ற தன்மையினுல் இயற்கையேதாய்
நினைக்கின்ற அறிவுடைய மக்கள் யார்க்கும்
பொற்புடைய அன்னையினைப் புந்திவைத்துப்
போற்றுதலே கடனுகும் கடனுக் கொள்வோம்
அற்புதமாத் தமிழ் நிலவன் அமைத்த இந்த
அருமை விழாக் கவியரங்கை நடத்தச் செய்த
அற்பினுக்கு நனிவணக்கங் செய்து சீர்த்த
அவையோர்க்கென் நன்றிசொலி அமைகின்றேன்யான்.

திரு. தமிழ்நிலவன் அவர்கள்
அன்னையார் நினைவு கூட்டத்திற் பாடியது

யாண்டு இதனெதிரா மாண்டு

நடன. காசிநாதன். எம். ஏ.,
பதிவு அலுவலர், தொல்பொருள் ஆய்வுத்துறை,
தஞ்சை மாவட்டம்.

ஆண்டு முறை :

கல்வெட்டுகளில் கலியகாப்தம் என்றும், சகாப்தம் என்றும், கொல்லம் ஆண்டு என்றும் தமிழ் ஆண்டாகிய பிரபவ, விபவ என்றும் குறிக்கப்படுகின்றன. கலியகாப்தம் கி. மு. 3101 இல் தொடங்கியது. சகாப்தம் கி. பி 78 இல் ஆரம்பமானது. கொல்லம் ஆண்டு கி பி 824 அல்லது 825 இல் வழக்கத்துக்கு வந்துள்ளது. பிரபவ. விபவ ஆண்டு முறை கி. பி. 14—15 ஆண்டிலிருந்து ஆளப்பட்டிருக்கிறது.

ஆட்சி ஆண்டு :

இவைகளல்லாது, 'கோ விசைய மயீந்திர பருமற்கு முப்பத்து மூன்றுவது', 'கோஇராஜகேசரிபன்மர்க்கு யாண்டு நாலாவது', 'கோப்பரகேசரி பன்மர்க்கு யாண்டு உ௰௧ ஆவது' என்றெல்லாம் காணப்படுகின்றன. இவை அந்தந்த மன்னன் அரசு கட்டில் ஏறியதிலிருந்து கணக்கிடப்படும் ஆண்டு முறையைக் குறிப்பிடுகின்றன இந்த முறையைக் கல்வெட்டு 'ராஜ்யவர்ஷம்'' என்று தெரிவிக்கிறது.

எதிராமாண்டு :

சில கல்வெட்டுகளில் ஒரு ஆண்டு கொடுக்கப்பெற்று. அதற்கு எதிராமாண்டு என்றோ, அல்லது எதிராமாண்டு இரண்டு, மூன்று, நான்கு என்றோ குறிக்கப்பெற்றிருக்கும். ஒரு ஆண்டு குறிக்கப்பெற்று அதற்கெதிராமாண்டு என்றால், அதை எவ்வாறு கணக்கிடப்படுவதென்பது புரியாதப் புதிராக இருந்தது சிலர் கொடுக்கப்பெற்ற ஆண்டோடு எதிராமாண்டைப் பெருக்க வேண்டும் என்றனர். வேறு சிலர் எதிராமாண்டைச் சேர்த்துக் கூட்டுதல் வேண்டும் என்றனர். சேர்த்துக் கூட்டுதல் வேண்டும் என்ற கருத்துக்குத் துணையாகச் சின்னமனூர்ப் பெரிய செப்பேட்டைக் காட்டினர். சின்னமனூர்ப்

பெரிய செப்பேடு பாண்டிய மன்னன் இரண்டாம் இராஜசிம் மனின் காலத்தியது. இச்செப்பேட்டில் தமிழ்ப் பகுதியில் "ராஜ்யவர்ஷம் இரண்டாவதினெதிர் பதினன்காம்யாண்டில்'' என்றும் சமஸ்கிருதப் பகுதியில் 'ராஜ்யவர்ஷம் 16" என் றும் குறிக்கப்பட்டிருத்தலால் [1] இரண்டாம் ஆண்டோடு பதி னன்கைக் கூட்டினுல்தான் சமஸ்கிருதப் பகுதியில் குறிக்கப்பட் டிருக்கும் 16-ஆம் ஆண்டோடு ஒத்துவரும் என்று காரணம் கூறினர்கள். இது சரியான கருத்து என்று இப்பொழுது ஒத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது

பாண்டியர்கள் மட்டும்தான் உபயோகித்தார்களா?

இம்மாதிரி கணக்கிடும் முறையைப் பாண்டியர் கல்வெட்டு களில் மட்டும்தான் காணமுடிகிறது என்று கருதப்பட்டு வந்தது, காரணம் அவர்கள் கல்வெட்டுகளில்தான் இம்முறை நூறு விழுக்காட்டுக்கு நூறு என்னும் விகிதத்தில் பயன்படுத் தப்பட்டுள்ளது. சில பாண்டிய மன்னர்களின் கல்வெட்டுகள், குறிப்பாக இரண்டாம் வரகுணன், இரண்டாம் இராஜசிம் மனின் கல்வெட்டுகள், ஒரு குறிப்பிட்ட ஆண்டோடு எதிரா மாண்டு இன்னது என்று தெரிவிக்கின்றன இரண்டாம் வர குண பாண்டியனின் பெரும்பாலான கல்வெட்டுகள் யாண்டு நான்கு இதனெதிர் அந்தந்த ஆண்டு என்று காணப்படும். [2] இரண்டாம் இராஜசிம்மனின் பெரும்பாலான கல்வெட்டுகள் யாண்டு இரண்டு இதனெதிர் அந்தந்த ஆண்டு என்று குறிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். [3] ஆனுல் இப் பழக்கம் பாண்டியர்களிடம் மட்டும்தான் இருந்தது என்று இல்லை. பல்லவ, சேர, சோழ மன்னர்களும் இத்தகையப் பழக்கத்தைக் கையாண்டிருக்கிறுர்கள்.

நந்திவர்மனின் கல்வெட்டு :

திருச்சி மாவட்டம் லால்குடியில் காணப்பெறும் பல்லவ மன்னன் தெள்ளாற்றெறிந்த நந்திவர்மனின் கல்வெட்டு ஒன்று [4] பாண்டியர் கல்வெட்டுகள் ஆண்டு தெரிவிக்கும் முறையைப்

1 பாண்டியர் செப்பேடுகள் பத்து, சின்னமனூர் (பெரிய) சாசனம். பக்கம் 157, வரி 146—147

2 S. I. I Vol. XIV, No. 12, 12 A, 12 B and 13.

3 Epi. Indica, Vol. XXVIII, pp 85 ff.

4 Ibid Vol XX. No 3. p. 46.

போன்று எழுதப்பட்டுள்ளது. "ஸ்வஸ்திஸ்ரீயாண்டு 4 ஆவதின் எதிராமாண்டு இடையாற்று நாட்டுத் திருத்தவத்துறை மஹாதேவர்க்கு தெள்ளாற்றெறிந்து வென்ற நந்திப்போத்தரையர் குடுத்த பழங்காசு 60" என்று அக்கல்வெட்டு செல்கிறது. இதில் நந்திவர்மனின் ஆட்சி ஆண்டு 4 + 1 என்று உள்ளது.

ஸ்ரீபாற்கரன் இரவிவர்மரின் கல்வெட்டு :

கேரள மன்னர் ஸ்ரீ பாற்கரன் இரவிவன்மரின் காலத்திய கொச்சின் செப்பேடுகளில் "செங்கோன்மை கொண்டான் கோஸ்ரீபாற்கரன் இரவிவன்மர் திருவடி பல நூறுயிரத்தாண்டும் செங்கோல் நடத்தியாளு நின்ற யாண்டு இரண்டாம் ஆண்டைக் கெதிர் முப்பத்தாரும் ஆண்டு [5] ...." என்று குறித்துச் செல்கிறது இதன்படி அச்செப்பேடு ஸ்ரீ பாற்கர இரவிவன்மரின் 38-ஆம் ஆட்சி ஆண்டில் எழுதப்பட்டது என்பது உணரப்படுகிறது.

மூன்றும் இராஜ ராஜனின் கல்வெட்டு.

திருச்சி மாவட்டம் திருவானைக்காவில் உள்ள ஜம்புகேஸ்வரர் கோயிலின் மூன்றும் திருச்சுற்று மதிலின் தெற்குச் சுவரில் சோழ மன்னன் மூன்றும் இராஜராஜனின் கல்வெட்டுகள் காணப்படுகின்றன அவற்றில் 6 கல்வெட்டுகள் [6] ஸ்ரீத்ரிபுவநச்சக்கரவர்த்திகள் ராஜராஜதேவற்கு யாண்டு பதினாறு எதிராமாண்டு என்று எழுதப்பட்டுள்ளன. இவ்வாறு கல்வெட்டுகளும் இராஜராஜனின் 17-ஆம் ஆட்சி ஆண்டில் வெட்டப்பட்டுள்ளன என்பதைத் தெரிவிக்கின்றன.

பாண்டியரல்லாதார் கல்வெட்டுகளில் காண காரணம்.

பல்லவ மன்னன் தெள்ளாற்றெறிந்த நந்திவர்மனுக்கும் பாண்டிய மன்னன் ஸ்ரீமாற ஸ்ரீவல்லபனுக்கும் அடிக்கடி போர் நிகழ்ந்து இறுதியில் பல்லவ மன்னன் வெற்றி பெற்றிருக்

---

5 Cochin Platas, No. 11 of Epi. Indica Vol. III.

6 A R E. No. 32 — 37 of 1937 — 38.

கிருன் அவ்வாறு போர் நிமித்தமாகப் பாண்டியர்களோடு தொடர்பு ஏற்பட்டதால் அவர்களின் சில பழக்கங்களைப் பல்லவ மன்னன் கையாள வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

கேரள மன்னன் ஸ்ரீபாற்கர இரவிவன்மர் ஆண்டபகுதி பாண்டிய நாட்டோடு மிகவும் ஒட்டிய பகுதி ஆகையால் பாண்டிய நாட்டில் உள்ள சில பழக்கங்களைத் தமது நாட்டிலும் கடைப்பிடித்திருப்பது இயற்கையே யாகும்.

சோழ மன்னன் மூன்ரும் இராஜராஜன் பாண்டிய மன்னன் மாறவர்மன் சுந்தர பாண்டியனுல் தோற்கடிக்கப்பட்டு. பின்னர் அவனுல் முடியும், நாடும் வழங்கப்பெற்றவன். ஆகையினுல் பாண்டியர்களது சில பழக்கங்களை அவன் மேற்கொள்ள வேண்டியது இன்றியமையாததாக இருந்திருக்கும் அதன் காரணமாகத்தான் அவனுடைய கல்வெட்டுகளில் அதிக அளவில் காணமுடிகிறது. அதிலும் குறிப்பாக அவனது 17-ஆம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டுகளில்தான் ''16-ஆவதின் எதிராமாண்டு'' என்று பாண்டியர்களது கணக்கிடுமுறை காணப்படுகின்றன. ஒருகால் அந்தக்காலக் கட்டத்தில்தான் அவனது முடியும் நாடும் பாண்டிய மன்னரால் வழங்கப் பெற்றதாக இருக்கலாமோ என்னவோ, ஆராய்தல் வேண்டும்,

பெரியர் — சிறியர்

கோ. மா. இராசகோபால்,
P. WQ. 364. இ, இரயில்வே காலனி,
அயன்புரம், சென்னை — 600023.

"செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்"

செயற்கரிய செய்பவரே பெரியா ரென்றும்
செயற்கரிய செய்யாதார் சிறிய ரென்றும்
உயர்குறளுக் குரைதந்தார்; உணர்ந்து நோக்கின்
உரியபொருள் சிறியாருக் குரைக்க வில்லை!
செயற்கரிய செய்பவரே பெரியா ரென்னில்
செய்யாதார் சிறியரெனச் செப்பல் வீணே!
நயத்தக்க முற்கருத்தை வற்பு றுத்தி
நாட்டுதற்கே யென்னிலது நலமா யில்லை!

உயர்புலவர் வள்ளுவரும் சொல்லை வீணே
உதிர்ப்பாரோ? சொல்பொருளின் உண்மை
காண்போம்!
வியப்புமிகு அரியசெயல் செய்வார் மேலோர்!
இயலாத மற்றோர்தம் திறமோ வென்னில்
செயற்குரிய செய்பவராம்! செய்தற்குரிய
சிறுசெயலும் செய்யாரே சிறியோ ராவார்!
பயன்மிக்க இப்பொருளின் பாங்கு ணர்ந்து
பார்மாந்தர் நலங்காணல் கடனே யென்பாம்!

ஈற்றடியின் முதற்சொல்லின் பிழையெ முத்தால்
எழுந்ததுவே பொருள்மாற்றம்; உற்றுக்காண்கில்
ஏற்றமிகு 'செயற்கரிய' வென்னுஞ் சொல்லை
எழில்விளங்கும் செயற்குரிய வென்னுஞ்சொல்லாய்த்
தேற்றமுற மாற்றுதலே சிறப்பாம்! மாற்றம்
திருக்குறளின் பிழையன்று; தேரா(து) அச்சில்
ஏற்றியவர் பிழையென்றே ஏற்று. ஆன்றோர்
எடுத்தாள வேண்டுமென இறைஞ்சு வேனே!

'யாதும் ஊரே, யாவரும் கேளிர்'

K. சோமசுந்தரம், B. A., B. L., தஞ்சை.

யாதும் ஊரே, கேட்பாயேயானுல்கேள், யாவரும் கேளிர், எனத்தொடங்கிக் கூறும் கணியன் பூங்குன்றனரது பாட்டு உலகத்தை நல்லுலகமாக்கும் ஏற்றத்தோடு, உயர்ந்தோரது அனைத்து வகையாய ஆற்றல்களையும் ஆக்கங்களையும் விளக்கும் பான்மையினைத் தன்னகத்தே கொண்டுள்ளது. தமிழ் கூறும் நல்லுலகம் அறிவறிந்த நன்மக்களது அயரா உழைப்பாலும் அறநெறி முயற்சியாலும் அமைகிறதென்பது

நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே

என்ற புறப்பாட்டின் வழி (187) தெளிவாக அறியப்படுதல் காண்க இன்னாததாய உலக இயல்பினை மறந்து. வாழ்வதற்குரிய மனத் திட்பத்தோடு நன்னெஞ்சத்து மக்கள் இன்பம் பயக்கும் வினைத் திட்பத்தை துணிவுடனாற்றி, இனியன தெளிந்து, நல்வாழ்வின் ஒழுக்கத்தைப் படைத்துக் கொளின், நல்லுலகுதானாக உருவாகுமென்பதில் ஐயமில்லை. இதனை, பக்குடுக்கை நன்கணியார்

இன்னா தம்ம விவ்வுலகம்
இனிய காண்கி தன் இயல்புணர்ந்தோரே

எனப் பகர்ந்துள்ளார். இதனுன், மறைகளும் மயங்கும் வண்ணம், இன்னாததும் மன்னாதது மாயவற்றையும் இனியதாக ஆக்கி, மனச்சான்றுக்கேற்ப, சிறப்புற வாழ்தல் அறிவுடைமை யாகுமென்பது பெற்றும்.

இத்தகைய சான்றாண்மை நல்லுலகை குன்றாமுறையில் ஆக்கும் மரபில் அறிவியல் வளத்தோடு வளர்ந்தவர் கணியன் பூங்குன்றனராவர். இவரது இயற்பெயர் அறியக் கூடவில்லை யாயினும் இவர் பூங்குன்றத்து ஊர்காரரென்பதும், அவ்வூரில் பல மக்கள் வாழ்ந்திருந்தும் இவரது பாட்டால் இவர் அந்த ஊருக்கு புகழையும் உண்டாக்கி ஊர்ப் பெயரையும் காப்பாற்றியுள்ளார் என்பது தெளியப்படும். மற்றும் இவர் பெரு மதிப்

புக்குரியவரென்றும், வாழ்வாங்கு வாழ்ந்தவ ரென்பதும், பெயரைக் கூருது ஊர்ப் பெயரால் அவரை அழைப்பதின் மரபு வழி புலப்படும். பூங்குன்றம் என்ற ஊரில், பெருந் தமிழ்க் குடியில் தோன்றி விளங்கிய இவர், கணிதத்தின் அடிப்படையில் உருவான தெய்வீகத் தன்மையினையும், விஞ்ஞான உண்மைகளையும் சோதிடக் கலையில் உணர்ந்து. அக்கலையைத் தன் ஆன்மீக முதுமை அறிவால், கர்மயோகமாக ஆக்கியுள்ள திறன் இவர் கணித இயலில் புலமைமிக்க பெருங் கணியரென சிறப்புப் பெயரான் வழங்கப்படுவர். 'வினைவெல்லாம் கண்ணியுரைப் போன் கணி' என்பது புறப்பொருள் வெண்பா மாலை; மேலும், இவர் என்றும் அமைதியில் விளங்கும் மெல்லிய சாந்த அருட்குணமுடையராதலால், இவரைப் பூங்குன்றனுரென்றும் அழைக்கப்படுவர். குன்று அமைதிக்கு அறிகுறியாதலால், அமைதியினைக் கூட்டும் குண ஒழுக்கத்துக்குன்ருகிய இவரை, பூங்குன்றனர் என அழைக்கும் வழக்காறு பண்டு இருந்திருத்தல் வேண்டுமென ஊகித்தறியப்படும்.

பூங்குன்றனர், பகையழித்து அன்பு நலம் தழைத்தோங்கும் வகையில் பண்பு வளர்க்கும் சிந்தனைத் திறனுடைய கவிஞர்: மனமாசகன்றவர்: தன்னலமற்ற தன்மையர்: புலனடக்கம் பெற்ற திறவோர்: சமநோக்கு அருள் பழுத்த தூயர்; பகுத்தறிவு மணம் கடவுணெறியில் கமழச் செய்யும் பொது நலத் தொண்டர்; அறிவுரை கிளக்கும் அறங்கலந்த நெஞ்சினர்: செறிந்த கணிதப் பயிற்சியின் முறையில். கணிப்புகளைப் பல கோணங்கள் வாயிலாகக் கணித்துரைக்கும் நுண்தேர்ச்சிப் புலவர்: படைப்பின் நுணுக்கங்களை ஊடுருவிப்பார்க்கும் ஞான நோக்குடையவர்: இயற்கையின் அற்புத ஆற்றல்களை, தவறற்ற காலக் கணக்குடன் கூர்ந்து உணர்ந்து அவற்ருெடு, இணைந் தொழுகும் நீர்மையர்: எழில்மயமாக. நிலவுலகை தெருள் நோக்குடன் கண்டு அதன் கண்ணுள்ள பொருள்களில் இறையருள் காணும் பெற்றியினையுடையார்; விஞ்ஞான மனப்பான்மையுடன் பேரானந்த நிலையை எய்துவிக்கும் மெய்ஞ்ஞானி; எனவே தெய்விகக் கோள்களின் நியதியைத் தெளிந்து, அந்நியதிவழி, வாழும் மக்களுயிர்களுக்கு ஏற்படும் பலன்களையும் மாற்றங்களையும், கணித நுணுக்கங்களால் நுட்பமாக நிர்ணயித்துக் காணும் கணியனர், எல்லாக் காலங்களுக்கு முரிய ஞாலப் புலவரென்பது அவர் அருளிய புறப்பாட்டைக் கொண்டே ஊகித்தறியப்படும். மற்றும் குணவியல், அறிவியல் ஒழுக்கவியல் முதலிய வற்றில் அவர் நெஞ்சம் ஒன்றி விளங்கிட, அவரது பரந்த நோக்கத்

தையும், விரிந்த கொள்கையினையும், உலகியல் ஒருமைப் பாட்டு ணர்வினைப்பற்றிய உண்மையினையும் அப்பாட்டே, நம்மனதில் வரையக்கூடிய மாண்பினைக் கொண்டுள்ளது.

ஆன்றவிந்த சான்றோராய குன்றனார் அருளியபாட்டு புற நானூற்றுத் தொகுப்பிலேயுள்ள 192-வது பாட்டாகும். புற நானூறு தமிழ் முடியரசுக்குரிய பண்டைப் பெருவேந்தர்களைப் பற்றியும், குறுநில மன்னர்களைப் பற்றிய சிறு வரலாற்றுக் குறிப்புகளையும் அவர்களது விழுமிய உள்ளக் கிடக்கை, வீரம், வள்ளற்றன்மை முதலாய குறிக்கோள்களையும் சிறுச்சிறு புகைப் படங்களாகப் பிடித்துக் காட்டும் ஓரிலக்கிய நூல், இதன் கண் ணுள்ள ஒவ்வொரு பாடலும் வாழ்க்கைத் தத்துவத்தையொட்டி மொழியமைப்பினை விளக்கும் தொல்காப்பிய இலக்கணத்திற்கு இலக்கியமாய புறப்பொருள் திணை துறைகளைக் கொண்டு திகழ் வது புறநானூற்றிற்கு இதயம் போல் விளங்கும் கணியன் பூங் குன்றனாரது பாட்டினை இனி காண்குவம்.

யாதும் ஊரே யாவரும் கேளிர் :
தீதும் நன்றும் பிறர்தர வாரா :
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன
சாதலும் புதுவதன்றே : வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன்றும் இலமே ; முனிவின்
இன்னா தென்றலும் இலமே : மின்னொடு
வானந் தண்டுளி தலைஇ ஆனாது
கல் பொருதிரங்கு மல்லற்பேர் யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியிற் றெளிந்தனம் ; ஆகலின் மாட்சியிற்
பெரியோரை வியத்தலும் இலமே ;
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே.

யாதும் ஊரே. யாவரும் உறவினரே. நன்றும் தீதும் பிறர் தந்து வருவன அல்ல : அவை தம்மாலே வருபவை நோத லும், அது தணிதலும் அவற்றோரன்ன. சாதல்புதிய நிகழ்ச்சி யன்று, இஃது உலகத்தியற்கை, ஆதலால் உயிர் வாழ்தலை இனிதெனக் கொண்டு மகிழ்தலும், வெறுப்பினால் அதனை துன்ப மானதென வருந்திப் புலம்புதலும் சீரியதல்ல மின்னலொடு வானம் குளிர்த் துளிகளை எந்த விதமாகவோ பொழிய, அவை பின் ஒலியுடன். ஆற்று வெள்ளப் பெருக்கொடு செல்ல, அதன் நீர் வழியே இயக்கப் பெறும் புணைபோன்று ஆருயிர்களும்

ஊழ் வழியே ஏகும் இயல்புடையன. உலகில் இன்ப துன்பங்கள், உயர்வு தாழ்வு செல்வ வறுமை நிலை ஆகிய துவந்துவங்கள் ஏன் இருக்கின்றன என ஊகமொடு கூற வொண்ணாதவாறு எப்படியோ இருக்கின்றதினுன், அவற்றை உயிர்கள் தூய்மை செய்வதும், துய்ப்பதும் ஊழின் முறையாய செயலாகும் இவ்வுண்மை, திறவோர் காட்சியளவில் உணர்ந்து, ஆய்ந்து தெளிந்து கொள்ளப்படுவது, ஆதலால் சிறப்பும் பண்பும் மிக்குயர்ந்த பெரியோர்களை அன்னார் செய்த நன்மைக்காக புகழ்தலும் வியத்தலுமில்லை. தீது செய்த சிறியவர்களையும் கண்டு இகழ்தலும் அதனினும் இலேம் என்பது இப்பாட்டின் பொழிப்பாகும்.

புறநானூற்றில் தலைமை சான்ற இப்பாட்டு பொதுவியல் திணையிலே பொருள் மொழிக் காஞ்சியினைக் காட்டி திகழுற விளங்குவது: உள்ளத்தில் கனிவு ஏற்படுமாறு மக்கட் பண்பை வற்புறுத்தித் தெளிய விளக்குவதுமாகும். இது மக்களின் பண்பாடு, நேய எழில் உணர்வு. பண்பமைந்த செயல்கள், வாழ்க்கைத் திறன், வளம் பெருக்கும் நாகரீக நிலை ஆகியவற்றை பொது வாழ்க்கையின் எல்லையிலே தெளிவுபடுத்திக் காட்டும் காலக் கண்ணாடி. மற்றும் இது மனநிறைவினையும் மக்களுக்கு அளித்து அறநெறிப் பற்றால் இறைவனைக் காணச் செய்யும் ஒளிவிளக்கு.

இப்பாட்டு, மரபு கடந்து நின்று, செப்பமுடன் நிலைத்து நெறிபட்ட மன்பதைக்குரியது: பிணக்கும் வேற்றுமைக்கும் இடனின்றி இணக்கமும் வணக்கமும் திகழும் ஒருமை வாழ்வை வற்புறுத்துவது: உலகியலில் படிந்தும் கலந்தும், கடந்தும் நிற்கும் சாதி, நாடு, மதம் முதலாய சிறுமைக் கட்டுப் பாகுபாடுகளை அறவே நீக்கி, மக்கள் நெஞ்சத்தை உலக ஒருமையின் உட்பொருளில் ஒன்ற வைப்பது; ஊழ் வினைப்பயன் என்றவை போன்ற வாழ்வின் தத்துவங்களை தெள்ளத் தெளிய உணர்த்தி, உலகம் மக்கள் பண்பாட்டு வனப்பாலும், பண்பாட்டுறவாலும் நிலைபெறுவதை அறிவிப்பது: வாழ்வியலின் அரிய கருத்துக்களையும், சான்றாண்மைப் பண்பாட்டின் மேம்பாட்டையும் கொண்டு இயங்குவது; நல்லாற்றுப் படுத்தும் வளமார் வாழ்க்கைக்கு வழிகாட்டி வாழ்வு நெறிகளையும் அறிவு ஒழுக்கங்களையும் எடுத்து இயம்புவது: இயற்கையையும், இறையையும் இணைத்து நல்வாழ்வுக்குரிய தவருத தத்துவ அறிவையும், அருளாண்மையின் உண்மையையும் அன்பையும் பண்பையும் ஒருங்கே உயிர்ப்புடன் ஊட்டுவது இப்பாட்டு புறத்துறைக்கு மட்டுமின்றி அகத்துறைக்கும் பொருந்தும் மாண்புடையது.

இப்பாட்டு. இன்ப துன்பங்கள் நாமியற்றும் இருவினைகளான் எழுந்தன வென்றும், முற்பிறவியில் செய்தவினை வரும்பிறவியில் காரண காரியமாகி இடையீடின்றி உயிரைத் தொடர்ந்து செல்லுகிறதென்பதை அகங் கொண்டது அஃதே போன்று உள்ளம் ஒன்றுபடும் காதலும் பிறவிதோறும் பழகி யமைந்து தொடர்வது எனும் கருத்து இப்பாவில் குறிப்பாகத் தொனிப்பதினுன், காதலன்பு எவ்விதம் தூய தன்மை மிக்கதோர் சிறப்பு வாய்ந்து உலகத்தை நல்லுலகமாக்குமென்பதும் அறியப்படும். அகத்தையும் புறத்தையும் பின்னணியாகக் கொண்ட இப்பாட்டில், அவைகளே பாட்டின் கருத்தொருமையிலே பின்னிக் கொண்டிருப்பதையும் காண்க.

தண்டமிழ் மக்களுக்கு கருவூலமாக அமைந்துள்ள புறநானூறு எனும் நூலில், பண்டைத் தமிழரது பண்பாடு, ஆட்சித் திறம், போர்த் திறம், பெருமிதம். கொடைவளம், சமுதாயப் பழக்க வழக்கங்கள் முதலாயவற்றை. ஆய்ந்து கற்போர் உணர்வர். இந்நூலைப் பாடிய புலவர்கள் அனைவரும் ஒரு காலத் தவருமல்லர். அன்னுர் தாங்கள் வாழ்ந்து வரும் நடைமுறை தமிழுலகை அப்படியே சித்தரித்துக் காட்டி, முடிவேந்தர்களையும். குறுநில மன்னர்களையும் வள்ளல்களையும் வியந்தும், மகிழ்ந்தும் புகழ்ந்தும் பாராட்டியுள்ளார் ஆனுல் அப் புலவர்களில் ஒருவராய கணியன் பூங்குன்றனுர் தான் வாழ்ந்த காலத்து நடைமுறை போக்கைக் கண்டு தமிழுலகை நல்லுலகமாகப் படைக்க வழி காட்டினுரென்பது அவரது பாட்டு வழங்கும் சூழ்நிலை மூலமும் ஊக்கவுரை மூலமும் உணரப்படும். நாடாளும் மன்னர்கள் ஒருவரை யொருவர், பகை பாராட்டும் பண்பொடு வஞ்சினம் கூறி போரிடும் காலத்தில் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்றும், குடிமக்களுக்கு முன் நியதிப்படி வரும் தீமையும் நன்மையும் அம்மன்னர்களால் பெரிதும் வாராதென்பதை 'தீதும் நன்று பிறர் தரவாரா' என்றும், புலவர்களை ஓம்பல் காரணமாக அம் மன்னர்களை கொன்னே வியந்து புகழும் நடைமுறைப் போக்கைக் காட்டத் தயங்காது 'மாட்சியின் பெரியோரை வியத்தலும் இலமே சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே' எனக் கணியனுர் உள நெகிழ்ச்சியொடு மொழிந்த வழி அவரது கொள்கையும், மனப் பக்குவ நிலையும் எவ்வாற்ருல் உருவாகியதென்பது ஒருவகையான் தெளியப்படும். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பது மேடைப் பேச்சுகளில் பெரும்பாலும் கையாளப்பட்டு முழங்கப்படுவதாயினும். அது பூங்குன்றனுரது தூய பெரு நோக்கினையும், பரந்த மனப் பான்மையினையும், சீரிய சிந்தனையியல்பினையும் சுட்டிக் காட்டுவதாகும்.

(தொடரும்)

கையறவு

11—10—1974 காலை 10-30 மணியளவில் கரந்தைப் புலவர் கல்லூரித் தமிழவேள் மன்றத்தில் கல்லூரி முதல்வர் தலைமையில் டாக்டர் மு. வரதராசனார் மறைவு குறித்து இரங்கல் கூட்டம் நடைபெற்றது பேராசிரியர்களும் மாணவர்களும் இரங்கல் உரையாற்றினர். அக்கூட்டத்தின் இறுதியில் நிறைவேற்றப் பட்ட இரங்கல் தீர்மானம் பின்வருமாறு :—

" தமிழகத்தில் தோன்றிய தமிழ்ப் பேரறிஞர்களுள் தனிச் சிறப்புப் பெற்று விளங்கியவரும், 'டாக்டர் மு வ' என அன் போடும் மதிப்போடும் அழைக்கப் பெற்றவரும் பொதுநிலை அலுவலராக இருந்து அருந்தமிழ் ஆர்வத்தால் தனி முறையில் தேர்வெழுதிப் பல்கலைக் கழகப் புலவர் தேர்வில் முதல்வராக வெற்றிபெற்று ஆயிரம் ரூபா பரிசு பெற்றுப், பின்னர்த் தன் தளரா உழைப்பால் படிப்படியாக உயர்ந்து. பண்டாரகர் பட்டம் பெற்றுச் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியிலும் சென்னைப் பல் கலைக் கழகத்திலும் தமிழ்த் துறைத் தலைவராக அமர்ந்து அரும் பணியாற்றி, இக்காலை சங்கமிருந்து தமிழராய்ந்த மதுரைப் பல்கலைக் கழகத்தில் துணை வேந்தராக வீற்றிருந்து மிகச் சிறப் பாகப் பணியாற்றியவரும், தன் தலைமையின் கீழ் பல பண்டா ரகர்களைத் தோற்றுவித்தவரும். மொழியாராய்ச்சி இலக்கிய ஆராய்ச்சி, சிந்தனைக் கட்டுரைகள் நாடகம் ஆகியவற்றோடு. சிறுகதை — புதினம் முதலிய புத்திலக்கியத் துறைகளிலும் தமக் கென ஒரு சிறப்பு வழியை அமைத்துக்கொண்டு பெருந்தொண் டாற்றியவரும், சமநிலை மக்களாட்சியிலும் காந்திய நெறியிலும் ஆழ்ந்த பற்றுடையவரும் — தமிழ் மாணவர் — பேராசிரியர் களுக்கு ஒல்லும் வகையால் துணைபுரிந்து எளிமையான வாழ்க்கை வாழ்ந்து காட்டியவருமான பேரறிஞர் டாக்டர் மு. வரதராசனார் எம். ஏ. (எம் ஓ. எல்.) பி. எச்டி அவர்கள் நம்மோடு மிகத் தொடர்புடையவர்கள்; 1948 ஆம் ஆண்டில் இளங்கோவடிகள் கழகத் தமிழ்க் கழக ஆண்டு விழாவிற்குத் தலைமை தாங்கியும், தமிழ்ப் பொழிலுக்கு அரிய கட்டுரைகள் வழங்கியும் நமது சங் கத் தொண்டிற்குத் துணைவராக வாழ்ந்த டாக்டர் மு வ. அவர் கள் 10—10—1974 இல் மறைந்தமை தமிழ் மொழிக்கு மட்டு மன்று தமிழ் நாட்டிற்கு — ஏன் பாரதத்திற்கே ஒரு பேரிழப் பாகும். அதிர்ச்சி தரத்தக்க இவர் தம் பிரிவினை ஆற்றாது கலங்கும் அவர் தம் குடும்பத்தினர்க்கும் உற்றார் உறவினர்க்கும் எங்கள் ஆற்றொணாத் துயரத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கையறவு

தமிழ்க் கடல் ராய. சொ. அவர்கள்

பாரத விடுதலைப் போரிற் பங்கேற்றுப் பணிபுரிந்தவரும் பைந்தமிழ் நூல் பல கற்றுத் தேர்ந்து தெளிவாக வழங்கும் புலமை பெற்ற வரும், திருந்திய சைவ நெறியாளரும், சமய சமுதாயப்பணியில்பேரார்வ முடையவரும், காரைக்குடி அழகப்பா கல்லூரித் தமிழ் ஆராய்ச்சித் துறைத் தலைவராக இருந்தவரும் நமது சங்கத்தோடு தொடர்புடையவரும் தமிழறிஞர்களால் தமிழ்க் கடல் எனப் பெருமையோடழைக்கப் பெற்ற வருமான திரு ராய. சொக்கலிங்கனார் அவர்கள் 30—9—74 இல் மறைந் தமை அறிந்து பெரிதும் வருந்துகிறோம். அவர் தம் பிரிவால் வருந்தும் அவர்கள் குடும்பத்தாருக்கும் நண்பர்களுக்கும் எமது ஆழ்ந்த துயரத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

திருவாசகமணி

கே. எம். பாலசுப்பிரமணி அவர்கள்

செந்தமிழும் ஆங்கிலமும் செழிப்புறக் கற்று இளமைக் காலத்து நீதிக் கட்சியிலும் — சுயமரியாதையியக்கத்திலும் இணைந்து செயலாற்றிப் பின்னர் சைவ நெறிபுக்குத் தலைசிறந்த தனது பேச்சாலும் எழுத்தாலும் தமிழ் நாடேயன்றி மலேயா, தென்னாப்பிரிக்கா, இலங்கை போன்ற அயல் நாடுகளிலும் தமிழ் நெறியை முழக்கிய வரும், திருவாசகத்தில் பெரிதும் ஈடு பட்டுத் திருவாசகமணி என எல்லோராலும் பாராட்டப் பெற்ற வரும் திருக்குறள் — திருவாசகங்கட்கு அரிய ஆங்கிலமொழி பெயர்ப்புச் செய்தருளியவரும் சிறந்த கவிஞரும் பேச்சாளரும் — நமது சங்கத்திற்குப் பெரிதும் தொடர்புடையவருமான திரு. திருவாசகமணி கே. எம் பாலசுப்பிரமணியம் அவர்கள் 3—10—74 இல் இறைமையடைந்தமை கேட்டுப் பெரிதும் வருந்துகிறோம் அவர் தம் பிரிவால் வருந்தும் குடும்பத்தா ருக்கும் நண்பர்கட்கும் எமது ஆழ்ந்த துயரத்தைத் தெரி வித்துக் கொள்கிறோம்.

அறிஞர் மு. வ. வுக்கு அஞ்சலி

அ. பிச்சை, எம். ஏ.,
ஆராய்ச்சி மாணவர் தமிழ்த்துறை
மதுரைப் பல்கலைக் கழகம்

வரதனூர் மறைந்தனரே வளர்துயர் பரந்ததுவே
வரிபடர் இருவிழியும் வெப்பநீர் உகுத்தனவே

முல்லைமலர் உதிர்ந்தனவே முத்தமிழும் அழுதனவே
எல்லையிலாத் தொண்டுசெய்த எங்கோவின் பிரிவிற்கே

பேரவலம் சூழ்ந்ததுவே பெருமலை வீழ்ந்ததுவே
ஊரெல்லாம் தமிழிசைத்த உத்தமரின் துஞ்சலுக்கே

நெஞ்செரி மலையாச்சே நெக்குருகி அலையாச்சே
விஞ்சுதமிழ்தான் வளர்த்த வித்தகரின் மறைவிற்கே

அறிவிமயம் சாய்ந்ததுவே அன்புநதி ஓய்ந்ததுவே
செறிமலர்க் கொன்றையவன் சேவடி எய்தினதே

தமிழ்மகள் பல்லணியிழக்கத் தமிழகம் வேந்திழந்ததுவே
அவிழ்மலர் மணம்போலே அருவம்கால் கலந்ததுவே

புலவர்கண் ணீரெல்லாம் புலம்புமுத் தாயினவே
சிலம்பாய்ந்த தமிழ்நெஞ்சம் கலங்கவிட்டுச் சென்றதுவே

நொந்துநொந்து துயருறவே வெந்துசாம்பல் ஆனீரே
பந்தம்சொந்தம் உறவறவே விந்தைஉல குற்றீரே

சான்றோர் பலர்புகழச் சரித்திரமே படைத்தீரே
ஈன்றோர்தாம் சென்றவழி இன்றேனோ பறந்தீரே

தமிழ்வையைத் தண்ணம்புனலில் இமிழ்குமரிப்பூம் புனலில்
தமிழ்மண்ணில் உடல்கலந்தீர் தமிழ்ப்பண்ணில்
உயிர்கலந்தீர்

அஞ்சலிதான் செய்தாலும் நெஞ்சழிவைக் காட்டிடுமா
அழுதுதான் பெய்தாலும் அடிமலரை எட்டிடுமா